19th August 1960]

என்பதில் கருத்து வேற்றுமை இருக்கிறது. அது சம்மந்தமான முடிவு, சட்ட நிபுணர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு கூடிய சீக்கிரத்தில் எடுக்கப்படும்.

SRI S. M. ANNAMALAI : அப்படிப்பட்ட முடிவு எடுக்க எவ்வளவு காலம் பிடிக்கும்? பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், சில பிராந்தியங்களில் அக்டோபர் 2-ம் தேதி ஏற்பட இருப்பதால், அதற்குள்ளாக அந்த முடிவைச் சர்க்கார் எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கூடிய சீக்கிரத்தில் முடிவு எடுக்க முயற்சி செய்யப்படும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சில பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு, அவற்றை இரண்டாகப் பிரித்தால், ஒவ்வொரு பஞ்சாயத்தும், நல்ல வருவாய் இருப்பதனால், நல்ல முறையில் இயங்க முடியும் என்று கேட்டிருப்பதால், அம்மாதிரிப் பஞ்சாயத்துக்களை இரண்டாகப் பிரித்துக் கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது அடுத்த கேள்வி சம்பந்தமானது.

MR. SPEAKER : இது பிரசிடெண்ட் மேல் "நோ-கான்பிடன்ஸ் மோஷன்" சம்பந்தமானது. அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

SRI A. GOVINDASAMY : இந்தக் கேள்வியின் பதிலில் கொடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு 1958-ம் வருஷ சட்டம் நிறைவேறிய பிறகு எலெக்ஷன் நடந்ததா என்று சொல்லுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னிடம் இருக்கும் தகவல்படி, இவர்கள் 1950-ம் வருஷ சட்டப் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

Bifurcation of Panchayats

* 315-ஊ Q.—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் பஞ்சாயத்துக்களை பிரிக்க வேண்டுமென்று எத்தனை கிராமங்களிலிருந்து கோரிக்கைகள் வந்தன?

(ஆ) அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

(இ) போளூர் தாலுகா தேப்பனந்தல், வெங்கட்டாம்பாளையம் கிராமங்களிலிருந்து மகசர் வந்ததா?

(ஈ) அப்படியானால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

[19th August 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Representations **were** received in respect of 60 villages in the **North Arcot district for** bifurcation of panchayats.

(*b*) A statement [a] is laid on the table of the House.

(*c*) Yes, Sir.

(*d*) The attention of the hon. Member is invited to items **32** and 14 respectively of the statement referred to in clause (*b*).

SRI S. M. ANNAMALAI : ஸார், சில பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதுபற்றி, "**It is under consideration**" என்று சொல்லப் பட்டிருக்கிறது. அக்டோபர் 2-ம் தேதி சில பிராந்தியங்களில் பஞ்சாயத்து யூனியன் ஏற்பட இருக்கிறது. அதற்கு முன்னால், பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதா, பிரிக்காமல் இருப்பதா என்பதை உடனடியாகப் பரிசீலனை செய்து, உத்தரவு போடுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுதான் பரிசீலனையில் இருக்கிறது; பரிசீலனை முடிந்ததும், உத்தரவுகள் பிறப்பிக்கப் படும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஆட்டியாம்பட்டிக் கிராம பஞ்சாயத்தைப் பிரிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஏற்படுவதற்கு முன்னால், அந்தப் பஞ்சாயத்துக்களை உடனடியாக ஏற்படுத்த முயற்சிப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னென்ன விண்ணப் பங்கள் வந்திருக்கின்றனவோ, அவற்றைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.

SRI A. GOVINDASAMY : ஒரே மணியக்காரர் அதிகாரத்தின் கீழ் ஒரு மைல் விஸ்தீரணத்தில் 4, 5 கிராமங்கள் இருந்து, 3,000 4,000 ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதனால் கிராமத்தார்கள் அல்லல்படுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றித்தான் சொன்னேன், கஷ்டம் இருக்கிறது என்று. ரொம்ப சிறு கிராமமாகப் போய்விட்டால், வசதி இல்லாமல் பஞ்சாயத்து நன்றாக நடைபெற முடியாமல் போய்விடும். போட்டிகள் இருப்ப தனாலும், கிராமங்களில் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, ஒரு பொது விதி இதற்குச் செய்ய முடியவில்லை. அந்தந்த கிராமங் களின் சூழ்நிலையை அனுசரித்துச் செய்ய வேண்டியிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : ஸார், தெப்பனந்தாள் கிராம மக்கள் தனிப் பஞ்சாயத்துக் கோரி, மகஜர் வந்து, இரண்டு முறை பரிசீலனை செய்து, விடப்பட்டிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அங்கே சந்தை இருக்கிறது; சந்தையில் வரும் வருமானத்தை 16 : 6 என்ற முறையில் பிரித்து அந்த அடிப் படையில் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கலாம் என்று மக்கள் கோரியிருக்கிறார்கள். அதைப் பிரித்துக் கொடுக்க சர்க்கார் முன் வரக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

---

[a] Printed as Appendix IV on pages 110–115 infra.

19th August 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : அது சட்டப்படி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட கிராமத்தைப் பொறுத்த பிரச்சினைகளையும் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது.

Street Lights

* 315-(எ) Q.—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் தாலூகாவில் எத்தனை கிராமங்களுக்கு தெரு விளக்குப் போடவேண்டுமென்று பஞ்சாயத்துக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தன?

(ஆ) அனுமதிக்கப்பட்ட கிராமங்களில் வேலைகள் முடிந்து விட்டனவா?

(இ) இல்லையானால், காரணமென்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) No representations have been received by the Government from any of the panchayats in the Polur taluk of North Arcot district for provision of street lighting.

(ஆ) A list ஆ of panchayats in Polur taluk which have been provided with street lighting is placed on the table of the House.

(இ) Does not arise, Sir.

MR. SPEAKER : அடுத்த கேள்வி, 315-ஏ . . .

SRI A. GOVINDASAMY : ஒரு "கிளாரிபிகேஷன்" ஸார். அறிக்கையில் எந்தெந்த பஞ்சாயத்துக்களில் லைட்டுகள் போடப் பட்டிருக்கின்றன என்று கொடுத்திருக்கிறது. கேள்வியில் எத்தனை கிராமங்களுக்கு வேண்டுமென்று கேட்டார்கள் என்று இருக்கிறது. . . .

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கேள்வியின் (ஆ) என்ற பகுதிக்கு பதிலளிக்கும் முறையில், அனுமதிக்கப்பட்ட கிராமங்களில் வேலைகள் முடிந்துவிட்டனவா என்றதற்கு, அந்த பஞ்சாயத்துக்களின் பெயர்களைக் கொடுத்திருக்கிறது.

Use of Thiru for Sri

* 315 (ஏ) Q.—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) "ஸ்ரீ" என்ற சொல்லை மாற்றி "திரு" என்று எழுதுவதற்கு அனுமதி கோரி எத்தனை நகராட்சி மன்றங்களிடமிருந்து தீர்மானங்கள் வந்தன?

(ஆ) அவற்றில் அனுமதிக்கப்பட்டவை எத்தனை?

ஆ Printed as Appendix V on page 116 infra.